# பசுமைக்குடிலில் வண்ணமிளகாய்



தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டையில் பிரமாண்டமாக அமைந்துள்ள பசுமைக் குடிலுக்கு சொந்தக்காரர்கள் முத்துசாமி- ரெங்கநாயகி தம்பதி. “மலைப்பிரதேசங்களில் மட்டுமே வளரக்கூடிய காலிஃப்ளவர், முட்டை கோஸ், வீரிய ஒட்டுரக தக்காளி, தனித்துவமான சில மலர் வகைகள், வாசனை திரவிய தயாரிப்புக்கான காம்பு நீண்ட மலர்கள், கேப்சிகம் எனப்படும் குடைமிளகாய், பாப்ரிக்கா மிளகாய் இவை எல்லாம் சமவெளி பகுதிகளில் சாதாரணமாக விளையாது. ஆனால் இதுபோன்ற பசுமைக் குடில் அமைத்து, கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் சிறப்பாக வளரும்” என்கிறார்கள் முத்துசாமி - ரெங்கநாயகி தம்பதியர். பாரம்பரிய வேளாண் குடும்பத்தைச் சேர்ந்த இந்தத் தம்பதி, சுமார் 7 லட்சம் ரூபாய் செலவில் இந்தக் குடிலைக் கட்டமைத் திருக்கிறார்கள். பசுமைக் குடில்கள்ங்கற ‘பாலிஹவுஸ்’ மழைத்தண்ணியை சுத்தமாக உள்ளே விடாது. வெப்பமும், ஒலியும் கூட தேவையான அளவுதான் உள்ள வரும். இதனால், தேவையான அளவு ஈரப்பதம் அப்படியே இருக்கும். காற்றோட்ட வசதிக்காக, வொம்பலொம்பச் சின்னத் துவாதம் கொண்ட வலையால் ஆன ஜன்னலும் இருக்கும். இதை நிழல் வலைனு சொல்வோம் என்று கூறினார்.

தரையிலிருந்து பன்னிரண்டு அடி உயரத்துக்கு பாலித்தீன் சுவர்கள், பதினைந்து அடி உயரத்தில் பாலித்தீன் மேல்கூரை என்று அமைந்துள்ளது. குடிலின் உள்ளே கார்பன் டை ஆக்ஸைடும் நீர் மூலக்கூறும் அதிகளவில் நிறைந்திருக்கிறதாம். பக்கச் சுவர்களிலும் நிழல் வலை ஜன்னல்கள், தரையிலிருந்து இரண்டு மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இதுபோன்று பசுமைக்குடில்கள் 7 ஆண்டுகள் வரை தாக்குபிடிக்குமாம். வாயிற்கதவும் பாலித்தீன் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது. பஜ்ஜி மிளகாய்ங்கிறது.. ஒரு கலர்லதான் வரும். ஆனா, குடை மிளகாய்தான் பச்சை, மஞ்சள், சிவப்பு, ஆரஞ்சு, பிங்க், கருப்பு, வெள்ளைனு மொத்தம் 7 கலரில் இருக்கிறது. குடைமிளகாய், பாப்பிக்கா மிளகாய் இருபது ரூபாய்க்குப் போகும். கால் ஏக்கருக்கு 3 முதல் 4 டன் வரைக்கும் மகசூல் கிடைக்கும். 3 டன் மிளகாய் விளைஞ்சா, 60 ஆயிரம் ரூபாய் விதைகளை எடுப்பு, உரம் இந்தச் செலவெல்லாம் 15 ஆயிரத்துக்கு வரும். ஆக கால் ஏக்கர்ல.. ஆறு மாசத்ததில் 45 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் என்கிறார் முத்துசாமி. குழித்தட்டு நாற்றங்கால் (portray) முறையை பயன்படுத்துகிறார்.

இதில் உள்ள குழிகளில் மக்கிய தென்னை நார் கழிவுகளை நிரப்பனும், ஒவ்வொரு குழியிலயும் ஒவ்வொரு விதையாக, மேலோட்டமாக நட்டு தண்ணீர் தெளிக்கணும். ஒன்பதாவது நாள் விதை முளைத்தால் வரும் 10 வது நாள் நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடிய குறிப்பா வேர் அழுகல் நோய் வராமல் தடுக்க உயிரியல் பயிர்

பாது காப்பு மருந்து தெளிக்கணும். 35 வது நாள் நாத்து தயாராயிடும். அதன்பிறகு பாலிஹெவுஸில் இருக்கிற தரையைக் கொத்தி, தொழு உரம் போட்டு, இரண்டு அடி அகலத்தில் பார் அமைக்கணும். ஒவ்வொரு பார்லயும் 2 வரிசையாக செடி நடணும். 20வது நாள் வேப்பம்புண்ணாக்கு 40 கிலோவும், கடலை புண்ணாக்கு 70 கிலோவும் போடணும். 30 வது நாள் பூ பூக்கும். 60 ம் நாள் காய்க்க ஆரம்பிச்சிடும். பஜ்ஜி மிளகாய் 40 கிராம் எடையும் குடை மிளகாய் 200 கிராம் எடையும் இருக்கும் எனச் சொன்னார். இது மாதிரியான செடிகளில் தண்டு பலவீனமாகத்தான் இருக்கும்.

அதனால்தான் ஒவ்வொரு பாருக்கும் மேல் 9 அடி உயரத்தில் 2 கம்பிகளைக் கட்டி செடிகள் தூக்கிக் கட்டியிருக்கின்றோம் என்று விளக்கம் கொடுத்தார்.நாத்து நட்ட 2 வது மாதத்தில் இருந்து அறுவடை பண்ண ஆரம்பிச்சிடலாம். 3 மாதம் வரை காய்ச்சுகிட்டே இருக்கும். வாரத்துக்கு 1 அல்லது 2 அறுவடை செய்யலாம். முக்கியமாக இதில் சொல்ல வேண்டியது, இதுமாதிரியான மிளகாய் சாகுபடிக்கு சொட்டுநீர் பாசனம்தான் உகந்தது என்று கூறினார்.

**தொடர்புக்கு:**
முத்துசாமி,
அம்மாபேட்டை,தஞ்சை மாவட்டம்
**தொலைபேசி**: 04374-232709**அலைபேசி**: 94438-06483